# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
C 8108589

1. District மாவட்டம் : DVAC IIKRS PS: காவல்நிலையம் DVAC IIKRS Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் 05 Date: நாள் 11.02.2021

2. (i) Act சட்டம்: Prevention of corruption Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 11.02.21 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 1430 Hrs Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11.02.2021 Time : நேரம் 1630 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் 1930 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் T1 Ambattur Police Station 13 km, North
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி MTH Road, Ambattur, Chennai-53

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. Anandraj (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் G. Ranganathan
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 27.01.1979 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Business (g) Address : முகவரி Rare Professional Service India Private Limited, Residing at No. 1/17, Ravi Street, Thangal Nagar, Ambattur, Chennai - 53.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. B. Thamim, Special Sub Inspector, T1, Ambattur Police Station, Chennai. 2. Tmt. Uma, WPC, T1 Ambattur Police Station, Chennai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Given in Separate Sheets annexed herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / ~~directed~~ A. Sanina Bani Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 11.02.2021 | [signature] 11/02/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
11.02.2021, 2000 hrs

Name: பெயர் A. SANINA BANU
Rank: நிலை Inspector of Police No. எண் ..........
SIU, V&AC, Chennai.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

<u>**ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.5/2021 சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம், 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையில் வரிசை எண்.12யின் தொடர்ச்சி பின்வருமாறு**</u> :-

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வுப்பிரிவு, காவல் ஆய்வாளர் அ.சமீனா பானு ஆகிய நான் இன்று 11.02.2021-ம் தேதி மாலை 4.30 மணியளவில் எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, சென்னை-53, அம்பத்தூர், இளங்கோ நகர், தேவி தெரு, எண்.1/17 என்ற முகவரியில் வசிக்கும் ஆனந்தராஜ் என்பவர், என் அலுவலகம் ஆஜராகி, என்னிடம் எழுத்துபூர்வமான புகார் மனு ஒன்றை அளித்தார். அவர் அளித்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு

அனுப்புநர்
ஆனந்தராஜ்,
S/o G.ரங்கநாதன்,
No.1/17. தேவி தெரு,
இளங்கோ நகர், அம்பத்தூர்,
சென்னை-53

பெறுநர்
காவல் ஆய்வாளர் அவர்கள்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
ஆலந்தூர், சென்னை-16

அய்யா,

நான் மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் சென்னை அம்பத்தூர், செக்ரட்டரியேட் காலனியில் Rare Professional Service India Private Limited என்ற Manpower சர்வீஸ் கம்பெனியை 2012ம் ஆண்டு முதல் சர்வீஸ் நடத்தி வருகிறேன். எனது கம்பெனி 2012ம் ஆண்டு முறையாக பதிவு செய்யப்பட்டதாகும். எனது கம்பெனி மூலம் சென்னையில் உள்ள கம்பெனிகளுக்கு வேலைக்கு ஆட்கள் தேவைப்படும் போது ஆட்களை அனுப்பி வைப்பேன். சென்னை விமான நிலையத்தில் உள்ள DHL BLUE DART என்ற கூரியர் கம்பெனியில் கடந்த 2016 முதல் எனது பணியாளர்கள் சுமார் 35 பேர் பணிபுரிந்து வருகிறார்கள். இப்பணியின் காரணமாக ஏர்போர்ட் அத்தாரிட்டி ஆப் இந்தியா துறையில் Cargo பிரிவில் சென்னை விமான நிலையத்தில் கண்காணிப்பாளராக பணியாற்றும் குமாரிகலா என்பவர் பழக்கமானார். அவர் காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா மலைப்பட்டு கிராமம், ரேணுகாம்பாள் தெரு, கதவு எண்.3/38ல் வசித்து வருவதாக தெரிவித்தார்.

குமாரிகலா என்னிடம் நீங்கள் Manpower Agency வைத்திருப்பதால் உங்களுக்கு தெரிந்தவர்கள் இருந்தால் மேற்கண்ட சென்னை விமான நிலையத்தில் Airports Authority of India யில் தனது பதவியை பயன்படுத்தி நிரந்தர வேலை வாங்கி தருவதாக கூறினார். மேலும் அவ்வாறு வாங்கி தருவதற்கு ஒரு நபருக்கு 5 லட்சம் என்றும், அதில் ரூபாய் 50 ஆயிரம் முன்பணமாக தரவேண்டும் என்று கூறினார். நான் இவ்வாறு விமான நிலையத்தில் வேலை இருப்பது தொடர்பாக ஏற்கனவே என்னுடன் பணிபுரிந்த உறவினர்கள், நண்பர்கள் மற்றும் இதர நபர்களிடம் தெரிவித்தேன். அவ்வாறு என்னுடன் பணிபுரிந்த நபர்களிடம் கூறியதில் அவர்களும் அதற்கு ஒப்புக்கொண்டு 24 நபர்கள் வேலைக்கான விண்ணப்பத்துடன் தலைக்கு ரூபாய் 50 ஆயிரம் வீதம் முன்பணமாக ரூ.12 லட்சம் என்னிடம் கடந்த ஜனவரி 2017 முதல் செப்டம்பர் 2017 வரை பல்வேறு தேதிகளில் கொடுத்தார்கள். நான் மேற்படி நபர்களின் வேலைக்கான விண்ணப்பங்களுடன் அவர்கள் கொடுத்த பணத்தையும் பல்வேறு தேதிகளில் குமாரிகலாவின் அறிவுரைப்படி அவருடைய ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி கணக்கில் (வங்கி கணக்கு எண்.20001304929) பணம் ரூ.12 லட்சம் டெபாசிட் செய்தேன்.

பின்னர் 27.09.2017ந் தேதி குமாரிகலா அவர்கள் மேற்படி 24 நபர்களும் சென்னை விமான நிலையத்தில் Airports Authority of India யில் வேலைக்கான Interview 04.10.2017ந் தேதி காலை 11.30 உள்ளதாக தெரிவித்து அதற்கான Interview Letter என்னிடம் கொடுத்தார்கள். நானும் மேற்படி 24 நபர்களையும் அழைத்து கொண்டு 04.10.2017ந் தேதி இது சம்மந்தமாக சென்னை விமான நிலையத்தின் Airports Authority of Indiaயின் Logistics நுழைவாயிலில் மேற்படி வேலைக்கான Interview Letter காண்பித்தபோது அந்த Interview Letter போலியானது என தெரிய வந்தது. இது தொடர்பாக குமாரிகலா அவர்களிடம் கேட்டபோது சரியான பதில் அளிக்கவில்லை. நான் கொடுத்த பணத்தை திருப்பி கேட்டபோது அவர் பல்வேறு தேதிகளில் காசோலைகள் கொடுத்தார். நான் அந்த காசோலைகளை வங்கியில் செலுத்தியபோது Funds Insufficient என்று காசோலைகள் bounce ஆகிவிட்டது. பின் நான் அந்த 24 பேரிடம் பெற்ற பணம் ரூ.12 லட்சத்தை என்னுடைய சொந்த பணத்திலிருந்து அவர்களுக்கு திருப்பி கொடுத்துவிட்டேன்.

பின்னர் இந்த மோசடி தொடர்பாக 09.08.2019ம் தேதி முதல் குமாரிகலா என்பவர் மீது சென்னை காவல்துறையில் புகார்கள் கொடுத்தேன். நடவடிக்கை இல்லை. கடந்த 27.12.2019 அன்று இது தொடர்பாக சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் கொடுத்தேன். அதற்கு ஒப்புகை சீட்டு (C.No.7026/CCB/COP/Visitors/2019) வழங்கினார்கள். நான் கொடுத்த புகார் தொடர்பாக காவல் ஆணையர் அலுவலகத்தில் கேட்டபோது அவர்கள் புகார் மனுவை T-1 அம்பத்தூர் காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், என்னை அங்கு சென்று பார்த்து கொள்ளும்படி கூறினார்கள்.

அதன்படி. நானும் அம்பத்துார் காவல்நிலையத்தில் கிரைம் பிரிவில் எனது புகார் மீது நடவடிக்கை எடுக்கும்படி ஆய்வாளர் திரு.பெரியதுரை அவர்களிடம் கூறினேன். ஆனால் இது தொடர்பாக அமபத்துார் காவல் நிலையத்தில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இடையில் கொரோனா நோய் தாக்கம் ஏற்பட்டது. பின்னர் நான் கொடுத்த புகார் சம்மந்தமாக இன்று 11.02.2021ம் தேதி மதியம் 02.30 மணிக்கு அம்பத்தூர் காவல் நிலையம் சென்றேன். அங்கிருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.தமீம் அவர்களை அணுகி என்னுடைய புகார் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளும்படி கேட்டேன். அதற்கு அவர் மேற்கண்ட குமாரிகலா என்பவரை அழைத்து வந்து உங்களுக்கு சேர வேண்டிய பணத்தை வாங்கி கொடுப்பது என்னுடைய பொறுப்பு என்றும், அவ்வாறு பணத்தை வாங்கி கொடுப்பதற்கும், எனது மனுவிற்கு CSR ரசீது கொடுப்பதற்கும், காவல் ஆய்வாளர் திரு.பெரியதுரை என்பவருக்கு லஞ்சமாக பணம் ரூ.10,000/-யும், தனக்கு தனியாக பணம் ரூ.5000/-யும் தரவேண்டும் என்று கேட்டார். என்னிடம் அப்போது கையில் பணம் இல்லை என்பதை தெரிவித்தேன். அதற்கு தமீம் அவர்கள் பரவாயில்லை பணத்தை தயார் செய்து கொண்டு என்னை அவரது செல்போனில் தெரிவித்தால் அவர் பணத்தை வாங்கி கொள்வதாக தெரிவித்தார். மேலும், அப்போது அவருடன் பணியில் பெண் காவலர் திருமதி.உமா என்பவர் எஸ்.ஐ தமீம் சார் கூறியபடி நீங்கள் பணத்தை கொடுத்தால் உங்களுடைய பிரச்சனையை நாங்கள் முடித்து தருவோம் என்று தெரிவித்தார்.

எனக்கு எனது புகார் மீது நடவடிக்கை எடுக்க லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. ஆகவே நான் கொடுத்த புகார் மீது நடவடிக்கை எடுக்க என்னிடம் லஞ்சம் கேட்ட காவல் உதவி ஆய்வாளர் திரு.தமீம் மற்றும் பெண் காவலர் திருமதி.உமா ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு
Sd/-xxxxx
(ஆனந்தராஜ்)
11.02.2021

Sir, Received this petition today (11.02.2021) at 16.30 Hrs. A Quiet and quick verification of the general reputation of the accused public servants was made. After satisfaction information was given to the higher officers and after getting their permission a case in V&AC Hqrs Cr.No.05/2021 U/s 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 is registered today (11.02.2021) at 1900 Hrs. against the accused persons.

Sd/-A.Samina Banu
11.02.2021
Inspector of Police
Special Investigation Cell
Vigilance & Anti-Corruption,
Chennai – 600 016.